Written by Administrator
Friday, 01 November 2013 00:00 -

ஏற்றுமதியும், பொருளாதார வளர்ச்சியும்!

– ஆர். முத்துராஜ்

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் ஏற்றுமதிகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. ஒரு நாட்டின் முக்கியத் தேவைகள் அனைத்தும் பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதி மூலம் ஈட்டப்படும் அந்நிய செலாவணி மூலம் தான் நிறைவேற்றப்படுகின்றன. ஏற்றுமதி நடவடிக்கைகள் மூலம் நேரடியாகவும், மறைமுகமாகவும் சுமார் 5 கோடி வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன. நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பில் 17 விழுக்காட்டை ஏற்றுமதிகள் தான் பங்களிக்கின்றன. கடந்த சில ஆண்டுகளில் நாட்டின் வளர்ச்சியில் ஏற்றுமதி தான் முக்கியப் பங்காற்றியுள்ளன. அதேபோல் ஏற்றுமதியில் உற்பத்திப் பொருட்களின் பங்கும் அதிகரித்துள்ளன. 1990–91 ஆம் ஆண்டில் ஏற்றுமதியில் உற்பத்திப் பொருட்களின் பங்கு 58% ஆக இருந்தது. 2009–10 ஆம் ஆண்டில் இது 70% ஆக உயர்ந்தது. அதிவேகமான ஏற்றுமதி வளர்ச்சியால் ஏற்றுமதி சார்ந்த துறைகளில் வேலைவாய்ப்பு வேகமாக அதிகரிக்கும். எந்தெந்த பொருட்களின் உற்பத்தியால் வேலைவாய்ப்பு அதிகரித்ததோ, அந்தப் பொருட்களின் ஏற்றுமதியும் அதிவேகத்தில் அதிகரித்தது. 2009–10 ஆம் ஆண்டில் மட்டும் உலக அளவில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக ஏற்றுமதி சற்று குறைந்தது. இராசாயனம் மற்றும் இராசாயன பொருட்களின் ஏற்றுமதி 1980களில் ஆண்டுக்கு சராசரியாக 20% அதிகரித்தது. இது 1990களில் 13 விழுக்காடாக குறைந்து. 2000–05 ஆண்டுகளில் 22 விழுக்காடாக அதிகரித்தது. 2005–10 ஆண்டுகளிலும் இத்துறையின் அதிவேக வளர்ச்சி தொடர்ந்தது. 2009–10 ஆம் ஆண்டில் மற்ற அனைத்துப் பொருட்களின் ஏற்றுமதியும் குறைந்த நேரத்திலும் இதன் துறையின் ஏற்றுமதி மட்டும் அதிகரித்து வந்தது. மேலே குறிப்பிடப்பட்ட மூன்று கால கட்டங்களிலும் எந்திரங்களின் (பொறியியல் பொருட்கள்) ஏற்றுமதி முறையே 9.8%, 15.7%, 23.4% அதிகரித்தது. 2005 ஆம் ஆண்டிற்குப் பிறகும் 2009–10 ஆம் ஆண்டைத் தவிர மற்ற அனைத்து ஆண்டுகளிலும் இப்பொருட்களின் ஏற்றுமதி அதிகரித்தது. அதேபோல், ஜவுளிப் பொருட்களின் (ஆயத்த ஆடைகள்) ஏற்றுமதி மேற்குறிப்பிடப்பட்ட 3 காலகட்டங்களில் முறையே 13 மற்றும் 11 விழுக்காடு வளர்ச்சியை எட்டின. 2000–2005 ஆம் ஆண்டு காலத்தில் இத்துறையின் ஏற்றுமதி வளர்ச்சி ஆண்டுக்கு சராசரியாக 4% என்ற அளவுக்கு குறைந்தாலும், அதன்பின் பொருளாதார பின்னடைவு ஏற்பட்ட 2009–10 ஆண்டு வரை ஏற்ற, இறக்கங்களுடன் கூடிய அதிக வளர்ச்சி எட்டப்பட்டது.

எனினும், ஏற்றுமதி சார்ந்த துறைகளில் வேலைவாய்ப்பு அதிக அளவில் அதிகரிப்பதற்கு காரணம் அதிக அளவிலான ஏற்றுமதி வளர்ச்சி தானே தவிர, ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் தயாரிப்புத் துறையில் அதிக எண்ணிக்கையில் தொழிலாளர்கள் பணியாற்றுவது அல்ல என்று தோன்றுகிறது. 2011–12 ஆம் ஆண்டைவிட 2012–13 ஆம் ஆண்டில் எட்டப்பட்ட ஏற்றுமதி வளர்ச்சி குறித்த விவரங்கள் அட்டவணை-1ல் தெளிவாக விளக்கப்பட்டிருக்கின்றன.

வேளாண் பொருட்களின் ஏற்றுமதி

இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் வேளாண் பொருட்களில் பதப்படுத்தப்பட்ட பழங்கள், காய்கறி மற்றும் அதன் உற்பத்திப் பொருட்கள், இறைச்சி மற்றும் இறைச்சிப் பொருட்கள், கோழி இறைச்சி மற்றும் கோழி இறைச்சி பொருட்கள், பால் பண்ணைப் பொருட்கள், மிட்டாய் வகைகள், பிஸ்கட் மற்றும் பேக்கரி தயாரிப்புகள், தேன், வெல்லம் மற்றும் சர்க்கரைப் பொருட்கள், கோகோ மற்றும் அதன் உற்பத்திப் பொருட்கள், அனைத்து வகையான சாக்லேட்டுகள், தானியங்கள் மற்றும் தானியப் பொருட்கள், நிலக்கடலை, பட்டாணி மற்றும் வாழைப் பருப்புகள், ஊறுகா வகைகள், சொறி வகைகள் மற்றும் அப்பளங்கள், கொத்தவரங்காய், நறுக்கப்பட்ட மலர்கள், மூலிகை மற்றும் மூலிகைப் பொருட்கள், காஃபி, கயிறு மற்றும் கயிறு பொருட்கள், ரப்பர் பொருட்கள், தேயிலை மற்றும் தேயிலைப் பொருட்கள், ஏலக்காய் உள்ளிட்ட மசாலாப் பொருட்கள், புளி, குழம்பு மசாலா மற்றும் மிளகாய், தேங்காய் பொருட்கள், ரப்பர் மற்றும் ரப்பர் பொருட்கள் ஆகியவை அடங்கும்.

உற்பத்தி பொருட்களின் ஏற்றுமதி

உற்பத்தித்துறையைப் பொறுத்தவரை 65% ஆலைகள் சிறு மற்றும் நடுத்தர தொழில் துறையைச் சேர்ந்தவை ஆகும். உற்பத்தித் துறையின் அந்நிய செலாவணி வருவாயில் 40 விழுக்காட்டையும், வேலைவாய்ப்பை உருவாக்குவதில் 50 விழுக்காட்டையும் சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை தான் பங்களிக்கிறது. உற்பத்தித்துறை ஏற்றுமதியில் ஆயத்த ஆடைகள், அடிப்படை இராசாயனப் பொருட்கள், மருந்து வகைகள் மற்றும் அழகு சாதன பொருட்கள், அலை தாண்டி விட்டது. 2011–12 ஆம் ஆண்டின் ஏற்றுமதி வருவாயான 3350 கோடி அமெரிக்க டாலருடன் ஒப்பிடும்போது இது 3 விழுக்காடு அதிகமாகும். இந்தியாவின் ஏற்றுமதியில் தமிழகத்தின் பங்கு 11.5 % ஆகும். தமிழகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களில் பொறியியல் பொருட்கள் குறிப்பாக வாகனங்கள் மற்றும் வாகன உதிரி பாகங்கள் பிரதும் முக்கியமானவை ஆகும். இவை தவிர ஜவுளி மற்ற ஆயத்த ஆடைகள், தோல் பொருட்கள், கைத்தறி பொருட்கள், வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட பொருட்கள், மசாலா பொருட்கள், முந்திரி பொருட்கள், கயிறு பொருட்கள் ஆகியவையும் தமிழகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன. எனினும், தமிழகத்தின் பொருளாதார வலிமையை வைத்துப் பார்க்கும்போது, இந்த ஏற்றுமதி அளவை நிரப்புப் ஆக்குவதற்கு வாய்ப்புகள் உள்ளன.

உலக ஏற்றுமதியில் இந்தியாவின் பங்கு வெறும் 1.7% மட்டுமே. உற்பத்தித்துறை ஏற்றுமதி ஒரு விழுக்காடு அதிகரித்தால் 0.53% அதிக வேலை வாய்ப்பை ஏற்படுத்த முடியும். எனவே, ஏற்றுமதியை நாம் அதிகரித்தால் அது நமது பொருளாதார வளர்ச்சிக்கும், வேலைவாய்ப்பு வளர்சிக்கும் வகை செய்யும். அதன் மூலம் இந்தியாவில் வறுமை குறையும். ●

ஆர். முத்துராஜ், இந்திய வணிகப் பணி, இணைத் தலைமை இயக்குனர், வெளிநாட்டு வணிகத் துறை, சென்னை.

அட்டவணை 1: இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் விவரம்

பொருட்கள்	2011-2012	2012-2013	வளர்ச்சி%	பங்கு%
நேர்ப்பு பயிர்கள்	644.45	690.48	7.14	0.53
வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த பொருட்கள்	14,396.81	14,489.03	0.64	11.03
கடல் பொருட்கள்	1,091.87	1,431.49	31.10	1.09
தாது மற்றும் கனிமங்கள்	3,390.48	2,568.73	– 24.24	1.96
தோல் பொருட்கள்	1,725.47	1,919.13	11.22	1.46
வைரம் மற்றும் நகைகள்	14,343.49	18,731.14	30.59	14.27
விளையாட்டு பொருட்கள்	80.65	72.49	– 10.13	0.06
இராசாயனம் மற்றும் சார்பு பொருட்கள்	16,537.58	17,746.28	7.31	13.52
பெறியியல் பொருட்கள்	25,938.64	24,523.91	– 5.45	18.68
மின்னணு பொருட்கள்	3,286.20	2,768.85	– 15.74	2.11
திட்ட பொருட்கள்	238.25	3.10	– 98.70	0.00
ஜவுளி	10,951.50	12,279.88	12.13	9.35
கைவினைப் பொருட்கள்	120.56	98.10	–18.64	0.07
தரைவிரிப்புகள்	394.95	457.64	15.87	0.35
கச்சாபருத்தி	2,477.41	677.11	– 72.67	0.52
பெட்ரோலியப் பொருட்கள் மற்றவை	24,312.62	27,951.90	14.97	21.29
	3,339.69	4,898.24	46.67	3.73
மொத்தம்	123,270.60	131,307.49	6.52	100.00

ஆதாரம்: தலைமை இயக்குனர், வணிகப் புலனாய்வு மற்றும் புள்ளியியல் துறை, கொல்கத்தா

தோல் மற்றும் தோல் பொருட்கள், எந்திரங்கள் மற்றும் கருவிகள் உள்ளிட்ட பொறியியல் பொருட்கள், வாகன உதிரி பாகங்கள், சைக்கிள்கள், எஞ்சின்கள், கம்ப்ரசர்கள், பம்புகள், மின் சாரம் மற்றும் வீட்டு பயன்பாட்டுப் பொருட்கள், கருவிகள், மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சைக் கருவிகள், முதன்மை இரும்பு மற்றும் எஃகுப் பொருட்கள், மின்னணு மற்றும் கணினி பொருட்கள், வன்பொருட்கள், வைஃபைப் பொருட்கள், தங்கம், வெள்ளி, பிளாட்டினம், வைரம் உள்ளிட்டவற்றைக் கொண்டு தயாரிக்கப்பட்ட நகைகள், ரீபேஷன் நகைகள், கைத்தறி பொருட்கள், இயற்கைப் பட்டு, பிளாஸ்டிக் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள் மற்றும் பொம்மைகள், செயற்கை மற்றும் ரேயான் இழை ஆடைகள் ஆகியவையும் அடங்கும்.

சேவைகள் ஏற்றுமதி

இந்தியாவின் ஒட்டுமொத்த பொருளாதார உற்பத்தியில் 65 விழுக்காட்டை சேவைத்துறை தான் பங்களிக்கிறது. உலக வர்த்தக சேவையில் இந்தியாவின்பங்கு 2.5% ஆகும். இந்தியாவின் ஒட்டுமொத்த வேலைவாய்ப்பில் 0.3 விழுக் காட்டை சேவைத்துறை வழங்குகிறது.

தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதி

கடந்த 2012–13 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் ஏற்றுமதி 3450 கோடி அமெரிக்க டாலர் என்ற